# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2139 - 2019 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2019.08.30

*2139 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | *1470* |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1470* |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** நிதி சட்ட மூலம் 2019, ஒகத்து மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1469- B81556 - 5,403 (2019/08)

# மாகாணசபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாணம்**

*கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்*

*2015, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்டதும் 1945 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (ஆ) ஆம் பகுதி மாகாண சபைகள் என்பதன் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைவாக, வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 50 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் கலைத்து மூடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பெயர் பட்டியலில் பின்வரும் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

| தொ. இல. | சங்கத்தின் பெயர் | பதிவு இல. | திகதி |
|---|---|---|---|
| 208 | மட்டப்படுத்தப்பட்ட தல்வில சாந்த தெரேசா சிக்கனம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம்– மாரவில | சி/549 | 1986.11.24 |

*மேற்போந்தவாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும் இந்த கூட்டுறவுச் சங்கத்தின் சரியான பதிவுப் பெயரானது மட்டுப்படுத்தப்படாத தல்வில சாந்த தெரேசா சிக்கனம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம் – மாரவில என்பதாகும். கூட்டுறவுச் சங்கத்தின் பதிவுப் பெயரானது வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அச்சுப் பிழையோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினால் மேற்போந்த விதத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிழையை சீர்செய்யும் பொருட்டு 2015, திசெம்பர் 11 ஆந் திகதியிடப்பட்டதும் 1945 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் மாகாண சபை அறிவித்தல்களின் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் பதிவினை இரத்துச் செய்த கூட்டுறவுச் சங்கங்கள் பட்டியலில் 208 ஆம் தொடர் இலக்கத்தின் கீழ் முன்னைய பதிவு இலக்கம் சிலா/549 கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட தல்வில சாந்த தெரேசா சிக்கனம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கமானது கலைத்து மூடல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்றதென இத்தால் அறிவிக்கின்றேன்.*

டி. எம். கே. சி. திசாநாயக்க,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடமேல் மாகாணம்)

*08-995*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**மத்திய மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

*மத்திய மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவைப் பிரிவின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கான வெற்றிடங்களை பூரணப் படுத்துவதற்காக கீழ் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய மாகாணத்தில் வசிக்கும் ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1.* **பொதுத் தகைமைகள் :**

- *1.1.* விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- *1.2.* சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்;
- *1.3.* மத்திய மாகாணத்தில் எந்தவொரு பிரதேசத்தில் வசிப்பவருக்கும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக

மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரி இந்த மாகாணத்தில் 03 வருடங்களை விட கூடிய காலம் மத்திய மாகாணத்தில் வசிப்பவர் ஒருவருடன் திருமணத்தில் இணைந்திருப்பாரெனில் துணைவரின் வதிவிடக் காலம் கருத்தில் கொள்ளப்படும்.);

1.4 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;

1.5 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல் உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

1.6 சேவையில் இணைத்துக் கொள்வதற்காக தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் விண்ணப்பம் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதிக்கு முன்னதாக பூரணப்படுத்தப்பட வேண்டும்.

**2. கல்வித் தகைமைகள் தொழில் தகைமைகள் :**

அனைத்து தகைமைகளையும் 2019.09.27 ஆந் திகதிக்குப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2.1. கல்வித் தகைமைகள் :

2.1.1 கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சாதாரண தரப் ) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு ( 06 ) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

பொருளாதாரம், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், கணக்கியல், வணிகப் புள்ளிவிபரவியல், வணிகக் கல்வி ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தில் அல்லது ஒன்றைவிடக் கூடிய பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தரப் ) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தில் அனைத்து பாடங்களிலும் ( பொதுச் சாதாரண பரீட்சை மற்றும் ஆங்கிலப் பாடங்கள் தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்./பழைய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

2.2. தொழிற்தகைமைகள் :

(i) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் உயர் கணக்கீடு அல்லது கணக்காய்வு முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாவில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

(ii) இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் சங்கம் ( AAT ) இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு நிகரான தகைமையைப் பெற்றிருத்தல்.

அல்லது

(iii) அங்கீரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கீடு அல்லது முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(iv) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**3. சம்பள அளவுத் திட்டம் :**

3.1 பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் MN 3– 2016 இன் சம்பளத் தொகுதிற்கமைய மத்திய மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கான மாதாந்தம் சம்பள அளவுத் திட்டம் கீழ்வருமாறு
ரூபா 31,040 – 10X445-11X660–10X730–10X750-ரூ. 57,550 உரித்துடையதாக அமையும் என்பதுடன் பொது நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் உப அட்டவணை II இன் ஏற்புகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**4. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுநரினால் 2014.06.04 அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

**5. ஆட்சேர்ப்பு முறை :**

அரச நிருவாக சுற்று நிருபம் 15/90 இற்கமைய மாவட்ட சனத்தொகை விகிதாசரத்தின் அடிப்படையில் திறந்த ஆட்சேர்ப்பின் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும். மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளுள் திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சையில்

புள்ளிகள் வழங்கப்படாது என்பதுடன் எழுத்துப் பரீட்சையில் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிலிருந்து இணைத்துக் கொள்வதற்காகப் பரிசீலிக்கப்படும்.

6. **சேவை நிபந்தனைகள் :-**

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.
2. அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டப்படுதல் வேண்டும்.
3. இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கக் கோரியோ மேற்கொள்ளும் எத்தகைய வேண்டுகோள்களும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பிக்கும் முறை:**

7.1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 600.00 இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்திப் பெறப்படும் (நீல நிற) பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதனை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

7.2. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2019.09.27 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மத்திய மாகாண அரசாங்க சேவையில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதல் -2019" எனவும் வதிவிட மாவட்டத்தினையும் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

8. **பரீட்சை மொழி ஊடகம் :**

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தின் சரியான குறியீட்டினை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9. **பரீட்சை நிலையங்கள் :**

பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

10. **எழுத்து மூலப் பரீட்சைக்குரிய பாடங்கள் :**

10.1 இந்த பதவிகளுக்கு இணைத்துக் கொள்வதற்காக விண்ணப்பதாரிகள் கீழ்வரும் பாடங்களில் எழுத்துப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

| பாடங்கள் | பாட உள்ளடக்கம் | காலம் | உயர்ந்தபட்ச புள்ளிகள் | சித்திபெறும் புள்ளி அளவு |
|---|---|---|---|---|
| 1. பொது உளச்சார்பு | அபேட்சகர்களின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு திறன், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்காக பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான அமைப்பில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும் | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பொது அறிவு | (அ) தேசிய மற்றும் சர்வதேச சமூக, பொருளாதார, அரசியல் அறிவு, (ஆ) கூட்டுறவு தத்துவங்கள் மற்றும் வாணிபம் தொடர்பான அறிவு குறித்து பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான 50 வினாக்களைக் கொண்டிருக்கும் | 01 மணித்தியாலம் | 100 | 40% |

11. **விண்ணப்பங்களை பூரணப்படுத்தலுக்கான அறிவுறுத்தல்கள் :**

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக A4 தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-5 வரையான விடயங்களையும் மிகுதியை மற்றைய பக்கங்களில் உள்ளடக்கியதாக விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் என குறிப்பிட வேண்டியது விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டமாகும். மாவட்டங்களின் குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| கண்டி | - | 01 |
| மாத்தளை | - | 02 |
| நுவரெலியா | - | 03 |

2. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, அல்லது அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் தரப்படுத்தலின் பிரகாரம் மூன்றாம் பதவி நிலை அல்லது உயர் பதவி நிலையில் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

3. யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும் விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

4. தற்போது அரசாங்க சேவையில் மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

12. **அபேட்சகர்களின் ஆளடையாளம் :**

தான் தோற்றுகின்ற பரீட்சை தொடர்பில் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் அபேட்சகர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

* ஆள்பதிவுத் திணைக்களம் மூலம் வழங்கப்படுகின்ற தேசிய ஆளடையாள அட்டை
* செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட/குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அந்த விடயங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மற்றும் இந்த பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அல்லது பரீட்சையின் பின் இணைத்துக் கொள்ளல்/இணைத்துக் கொள்ளாமலிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் எடுத்தல் என்பன மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும். அத்துடன் இவ்வறிவித்தலில் வெளியாகாத வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தல்/இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குறியதாகும்.

இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலம் மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் மத்திய மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் (www.psc.cp.gov.lk) எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்பதுடன் குறித்த விண்ணப்பப்படிவத்தையும் குறித்த இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றேன்.

எம். ஜீ. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2019, ஓகத்து 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

பரீட்சை இலக்கம் : ☐
அலுவலக உபயோகத்திற்காக

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
(உரிய குறியீட்டை கூட்டினுள் இடவும்) ☐ (சிங்களம் : S தமிழ் : T ஆங்கிலம் : E)

01. வதிவிட மாவட்டத்திற்குரிய குறியீட்டு இல. : ☐ (கண்டி : 01 மாத்தளை : 2 நுவரெலியா : 3)

1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./ Ms. Mrs. (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
……………………………………………………………………………………
1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- திரு./திருமதி/செல்வி (சிங்களத்தில் /தமிழில்)
……………………………………………………………………………………
1.3. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :
……………………………………………………………………………………
1.4. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில் /தமிழில்)
……………………………………………………………………………………

2. 2.1. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-
……………………………………………………………………………………
2.2. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :
……………………………………………………………………………………
2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
……………………………………………………………………………………

2.4. தற்போது அரசாங்க சேவையில் இருப்பவராயின் அலுவலக முகவரி :
……………………………………………………………………………………………………….

2.5 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ………………………………………………………………….

3. 3.1. பிறந்த திகதி :- ………………………………………………………………………………………………….

3.2. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2019.09.27) ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள்: …………………….மாதங்கள் : ………………………………. நாட்கள் : ……………………………….

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. பால் : (ஆண் - 0, பெண் - 01)
( உரிய குறியீட்டை கூட்டினுள் இடவும் ) ☐

5. நிரந்தர வதிவிட மாவட்டம் :- ……………………………….

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | | |
| தேர்தல் தொகுதி | | | | |
| வாக்காளர் பிரிவு | | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | | |
| வீட்டு இல. | | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | | |

6. கல்வி தகைமைகள் :

6.1 க. பொ. த. ( சா. த. ) பரீட்சையின் விபரங்கள் :
ஆண்டு :…………………. சுட்டெண் : ………………….

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

6.2 க. பொ. த ( உ. த ) பரீட்சையின் விபரம் :
ஆண்டு :…………………. சுட்டெண் : ………………….

| | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

7. தொழிற் தகைமைகள் :

| தொழில் தகைமை பூரணப்படுத்திய நிறுவனம் | பூரணப்படுத்தியிருக்கும் தொழில் தகைமைகள் | காலம் | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

8. வேறு தகைமைகள்:……………………………………………………

9. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பான விபரங்கள் :
   (i) பணம்செலுத்திய பிரதேச செயலகம்: ……………………………………………
   (ii) திகதி: …………………
   (iii) பற்றுச் சீட்டு இலக்கம்:……………………………………

பற்றுச் சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும் நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

……………………………………
திகதி:…………………………… விண்ணப்பதாரியின் கையொப்பம்.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………… …………………………………..என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவர் இன்று ………………… என் முன்னிலையின் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி:……………………………

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ……………………………
பதவி :……………………………
முகவரி:……………………………

*12.* ***அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரி எனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

*இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ……………………………………………………. என்பவரை இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் …………………………………………… ஆக கடமையாற்றுகிறார். கடந்த 05 வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதை தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.*

……………………………………….

*திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்,*

*(உத்தியோகப்பூர்வ முத்திரை.*

*திகதி :…………………………..*

*09-388*